ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2316/20 - 2023 ජනවාරි මස 24 වැනි අඟහරුවාදා - 2023.01.24

*2316/20 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்.*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு மற்றும் 223 ஆம் பிரிவுகளின் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகிய என்னால் ஒழுங்கு செய்யப்பட்ட பின்வரும் கட்டளைகள் இத்தால் வெளியிடப்படுகின்றது.*

**டிக்கிரி கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
*2023, சனவரி 24.*

**கட்டளைகள்**

*1.* இக்கட்டளைகள் சப்பிரகமுவ மாகாணத்தின் பிரதேச சபைகளால் பேணிச் செல்லப்படுகின்ற பாதைகள் மற்றும் ஒடுங்கிய பாதைகளில் நிரந்தர குறியீடுகள் மற்றும் எல்லைகளைக் குறிப்பிடுதல், திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அவற்றின் பெயர் அட்டவணையொன்றைக் காட்டி அறிவித்தல்களை பிரசுரிக்கும் பணிகளுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கட்டளைக் கோவை என்ற பெயரால் அறிமுகப்படுத்தப்படும்.



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 23ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையொன்றிற்குச் சொந்தமானதாக உள்ளது எனக் கருதப்பட வேண்டிய பாதைகள் மற்றும் ஒடுங்கிய பாதைகள் தொடர்பில் மேற்கூறிய சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சப்பிரகமுவ மாகாணத்திற்குள் அமைந்துள்ள பிரதேச சபைகளுக்கு கூடிய கால கட்டமொன்றைப் பெறுவதற்காக உத்தரவளிப்பதற்கும் மேற்கூறிய பாதைகள் மற்றும் ஒடுங்கிய பாதைகளின் திட்டப் படங்களை ஒழுங்கு செய்வதற்கான பணிகளை மேற்கொள்வதற்கும், மேற்கூறிய பாதைகள் மற்றும் ஒடுங்கிய பாதைகளின் பெயர் அட்டவணைகளைக் காட்டி அறிவித்தல்களைப் பிரசுரிப்பதற்கும் இக்கட்டளைகளின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற் திட்டங்களின்படி நடவடிக்கைகளை மெற்கொள்ளல் வேண்டும்.

3. (அ) 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய இதனகத்து இதன்பின் "சட்டம்" என அறிமுகப்படுத்தப்படுகின்ற, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மூலமும் அச்சட்டத்தின் 223 ஆம் பிரிவின் மூலமும் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழான பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, இக்கட்டளை செயற்படுகின்ற 2023.01.24 ஆம் திகதி தொடக்கம் பன்னிரண்டு மாத மேலதிக கால எல்லை சப்பிரகமுவ மாகாணத்தின் பிரதேச சபைகளிடம் பெற்றுக் கொடுப்பதற்கு இத்தால் உத்தரவளிக்கப்படுகின்றது.

(ஆ) மேலே 3(அ) பிரிவின் மூலம் மேலதிகமாக உத்தரவளிக்கப்பட்ட பன்னிரண்டு மாத கால எல்லைக்குள் அப்பணிகளை நிறைவேற்றி முடிவடையச் செய்யத் தவறும், இதனகத்து இதன்பின் "சபை" என அறிமுகப்படுத்தப்படுகின்ற சப்பிரகமுவ மாகாணத்தின் ஏதாவதொரு பிரதேச சபைக்கு அப்பணிகளை நிறைவேற்றி முடிவடையச் செய்வதற்காக மேலும் கால எல்லையொன்று தேவைப்படுமாயின் அதற்கான விசேட காரணங்களைச் சமர்ப்பித்து மேலதிக கால எல்லைக்காக உத்தரவு தருமாறு கேட்கப்படலாம். அத்துடன் அக்கால எல்லையானது, 2023.01.24 ஆந் திகதி தொடக்கம் 2 வருடங்களுக்கு (இரண்டு வருட காலத்துக்கு) மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. (அ) சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் சபைக்குச் சொந்தமானதெனக் கருத வேண்டிய இதனகத்து இதன்பின் "பாதை" என அறிமுகப்படத்தப்படுகின்ற பாதைகள் மற்றும் ஒடுங்கிய பாதைகளை அறிந்து கொண்டு அப்பாதைகள் மற்றும் ஒடுங்கிய பாதைகள் தொடர்பிலான பெயர் அட்டவணையொன்றை ஒழுங்கு செய்வது சபையின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் அல்லது 17 ஆம் பிரிவின்கீழ் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அசைவற்ற ஆதனங்களாகக் கணிக்கப்பட்டுள்ள அனைத்துப் பாதைகள் மற்றும் ஒடுங்கிய பாதைகளையும் 4(அ) பெயர் அட்டவணையிலேயே உள்ளடக்குவதற்கான பணிகள் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. (அ) 4 (அ) இன்படி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பெயர் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாதை தொடர்பிலும் இங்கு 01 ஆம் அட்டவணையின் படிவத்தின் பிரகாரம் அறிந்து கொள்ளும் குறியீட்டு இலக்கமொன்று வீதம் ஒதுக்குதல் வேண்டும்.

(ஆ) அறிந்து கொள்ளும் குறியீட்டு இலக்கமொன்றை ஒதுக்கிக் கொண்ட ஒவ்வொரு பாதையிலும், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பூகோள ரீதியிலான தொகுதி இலக்கத் தரவுகளை சேகரித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது சபையின் கடமையாகும்.

I. ஆரம்ப இடத்துடன் இணையும் ஏனைய ஏதாவதொது பாதையின் பெயர் மற்றும் அந்த ஆரம்ப இடத்தின் இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களைக் குறிப்பிடுதல்.

II. மேற்குறிய பாதையுடன் இணையும் ஏனைய ஏதாவதொரு பாதையிலிருந்து நீடித்துச் செல்வது, இடது பக்கமாகவா அல்லது வலது பக்கமாகவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

III. பாதையின் ஆரம்பப் புள்ளியிலிருந்து எளிய கோடொன்றின் உருவில் மாற்றமடையும் ஒவ்வொரு இடத்திலும் மேற்கூறிய பாதையின் இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களைக் குறிப்பிடுதல்.

IV. பாதையின் குறுக்கே இறங்கிச் செல்லும் ஆறொன்றுக்கு, ஓடையொன்றுக்கு சிறு அருவியொன்றுக்கு அல்லது ஏனையவொரு நீரூற்றுக்கு மேலாக அமைக்கப்பட்டிருப்பது பாலமொன்றா, மதகொன்றா, பெட்டி மதகொன்றா, நீரிடைப்பாதையொன்றா அல்லது ஒன்றை மரப்பாலமா என்பதனைப் பற்றியும் அவற்றின் அமைவிடத்தைக் காட்டும் பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களையும் குறிப்பிடுதல்.

V. பாதையின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு பக்கச்சுவர் அல்லது ஏனைய ஏதாவதொரு பக்கத் தாங்கி இருக்குமாயின் அதன் ஆரம்ப இடத்திலும் முடிவடையும் இடத்திலும் பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களைக் குறிப்பிடுதல்.

VI. பாதை நெடுகிலும் அமைக்கப்பட்டுள்ள வடிகால்களின் ஆரம்ப இடத்திலும் முடிவடையும் இடத்திலும் பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களைக் குறிப்பிடுதல்.

VII. பாதை நெடுகிலும் நாட்டப்பட்டுள்ள மின் கம்பங்களுள் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள மின் கம்பங்களிலும் அவ்விடங்களிலும் பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களைக் குறிப்பிடுதல்.

VIII. ஆரம்ப இடத்திலிருந்து முடிவடையும் இடம்வரை பாதையை அபிவிருத்தி செய்வதற்காக உபயோகித்துக் கொண்டுள்ள மேற்பரப்புத் தட்டு என்ன என்பதனையும் அதன் மேற்பரப்புத் தட்டு ஒன்றுக்கொன்று வித்தியாசமடையும் ஒவ்வொரு இடத்திலும் பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களைக் குறிப்பிடுதல்.

IX. பாதையின் நீளத்தை மீற்றர்களில் குறிப்பிடுதல்.

X. பாதையின் சாதாரண அகலத்தையும் அபிவிருத்தி செய்யப்பட்ட அகலத்தையும் மீற்றர்களில் குறிப்பிடுதல்.

XI. பாதையின் அகலம் வித்தியாசமடையும் ஒவ்வொரு இடத்திலும், இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களைக் குறிப்பிடுதல்.

6. இக்கட்டளைகளின் கீழ் ஒழுங்கு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஆவணமும் திட்டப்படமும் கந்தவல/ ஸ்ரீ லங்கா என்ற தொகுதி இலக்க அமைப்பிற்கு உட்பட்ட பூகோள ரீதியிலான தொகுதி இலக்கங்களை உபயோகித்துக் கொண்டு ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

7. 4(அ) பெயர் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள் தொடர்பில் சேகரிக்கப்பட்டுள்ள தரவுகளை ஆதாரமாகக் கொண்டு இரண்டாம் அட்டவணையின் படிவத்தின் பிரகாரம், திட்டமொன்றை ஒழுங்கு செய்வது சபையின் கடமையாக இருத்தல் வேண்டும்.

8. இதன் மூன்றாம் அட்டவணையின் படிவத்திற்கு அமைவாக, ஒவ்வொரு பாதை தொடர்பிலும் தகவல்கள் அடங்கிய ஆவணமொன்றை ஒழுங்கு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது சபையின் கடமையாகும்.

9. (அ) 4 (அ) இன் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட பெயர் அட்டவணையில் உள்ளடங்கிய பாதைகள், சபைக்குச் சொந்தமான பாதைகளாக ஏற்றுக் கொள்வதற்கு சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சபையினால் பிரேரணை அங்கீகரிக்கப்படுதல் மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(ஆ) (அ) ஆம் பிரிவின் கீழ் சபை தீர்மானித்ததன் பின்பு, மூன்றாம் அட்டவணைக்கு இணங்கும் வகையில் அப்பாதைகளின் பெயர் அட்டவணையொன்று உள்ளடங்கிய அறிவித்தலொன்றை வர்த்தமானியில் பிரசுரிப்பது சபையின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(இ) வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற மேற்கூறிய அறிவித்தலில் உள்ளடங்கிய ஏதாவதொரு பாதையின் உரிமை தொடர்பில் உரிமை கூறும் எவர்களேனும் தரப்பினர்கள் இருப்பார்களாயின், சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் செயலாற்றுவதற்கு மேற்கூறிய தரப்பினர்களுக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

10. (அ) 9(ஆ) இன்கீழான அறிவித்தலொன்றை வர்த்தமானியில் பிரசுரித்ததன் பின்பு, அத்தகைய ஏதாவதொரு அறிவித்தலில் உள்ளடங்கிய ஏதாவதொரு பாதையின் உரிமை தொடர்பில் தகுந்த நீதிமன்றமொன்றில் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பிலான தகவல்கள் உள்ளடங்கிய ஆவணமொன்றைப் பேணுவது சபையின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) எவரேனுமொரு நபரினால் 9 (ஆ) இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கு ஏற்புடையதாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளமைக்கு அந்த நீதிமன்றத்தினால் சபையிடம் நீதிமன்ற அறிவித்தலொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டவுடன், அந்த வழக்கு தொடர்பிலான தகவல்களை மேற்கூறிய ஆவணத்தில் குறித்து வைப்பதற்கும், மேற்கூறிய வழக்கு தொடர்பில் இறுதித் தீர்ப்பு கிடைக்கும் வரையிலான நிகழ்வுகளை வழக்கிற்கு கோவைப்படுத்தியுள்ள ஆவணங்கள் மற்றும் பணிக்குறிப்புகளில் உள்ளடங்கிய விபரங்களின்படி காலத்திற்குக் காலம் மேற்கூறிய ஆவணத்தை இற்றைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் சபையின் கடமையாக இருத்தல் வேண்டும்.

11. 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலொன்றின் மூலம் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் தினத்திற்கு முன்பு அவ்வறிவித்தலில் உள்ளடங்கிய ஏதாவதொரு பாதையின் உரிமை தொடர்பில் தகுந்த நீதிமன்றமொன்றில் தொடரப்பட்டுள்ள ஏதாவதொரு வழக்கில், மேற்கூறிய நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பின்படி உடனே அப்பாதையின் எல்லைக் குறியீடுகளை மாற்றம் செய்வதற்கும் அத்திட்டப்படத்தில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் ஏற்பாடுகளைச் செய்வது சபையின் கடமையாக இருக்க வேண்டியதுடன், ஏற்புடைய நீதிமன்றத் தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி தொடக்கம் அத்தகைய மாற்றங்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

12. (அ) 11 ஆம் பிரிவின் கீழ் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்ட பாதைகள், மற்றும்

(ஆ) 9 (ஆ) பிரிவின் அறிவித்தலொன்றின்படியான ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்படாத பாதைகள், சபைக்குச் சொந்தமான பாதைகளெனக் கருதப்பட வேண்டும் என்பதற்கும் மேற்கூறிய பாதைகள் தொடர்பில் ஆவணமொன்றை வர்த்தமானியில் பிரகடனம் செய்ய வேண்டும் என்பதற்கும் பிரேரணை ஒன்றை சபையினால் அங்கீகரித்துக் கொள்ளப்படல் வேண்டும்.

(இ) (ஆ) ஆம் பிரிவின் கீழான பிரேரணை அங்கீகரித்தல் மற்றும் அது தொடர்பிலான அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரித்தல் ஆகிய பணிகள், 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் 3 மாத காலம் முடிவடைந்த பின்பும் 6 மாத காலம் முடிவடைவதற்கு முன்பும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஈ) 9 (ஆ) பிரிவின் கீழான அறிவித்தலொன்றின்படி தகுந்த நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்த அத்துடன் 12 (ஆ) பிரிவின் கீழான அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டதன் பின்பு மேற்கூறிய நீதிமன்றத்தினால் இறுதித்தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு பாதை தொடர்பில் மேற்கூறிய இறுதித் தீர்ப்பின்படி சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தேவையான மாற்றங்களைச் செய்து, அத்தகைய பாதைகள் உள்ளடங்கிய மேலதிக பெயர் அட்டவணையொன்றுடனான அறிவித்தலொன்றை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது சபையின் கடமையாகும்.

13. (அ) 12 ஆம் பிரிவின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தலொன்றில் உள்ளடங்கிய ஒவ்வொரு பாதையும் சபைக்குச் சொந்தமாக்கப்பட்ட பாதைகளாகக் கருதுவது சட்டரீதியானதாகும்.

(ஆ) சபைக்குச் சொந்தமானதெனக் கருதப்பட்ட ஏதாவதொரு பாதை, சட்டத்தின் 24(6) ஆம் பிரிவின் கீழான பாதையொன்றாக உபயோகித்தல் முடிவடையும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், 12 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலொன்றில் திருத்தமொன்றைப் பிரசுரிப்பது சபையின் கடமையாக இருத்தல் வேண்டும்.

14. சபைக்குச் சொந்தமானதாக்கப்பட்டதாக கருதப்படும் ஒவ்வொரு பாதைக்காகவும், அப்பாதை தொடர்பிலான தகவல்கள் உள்ளடங்கிய கடிதக் கோவையொன்றும் இலத்திரனியல் மென் பிரதியொன்றும் பாதைகள் தொடர்பிலான இன்வென்றியொன்றும் ஒழுங்கு செய்வதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இற்றைப்படுத்துவதும் சபையின் கடமையாக இருத்தல் வேண்டும்.

15. சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி, இக் கட்டளைகளில் -

"சபை" என்பது சப்பிரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச சபைகளின் அனைத்துப் பணிகள், தீர்மானங்கள், பணிப்புகள் மற்றும் செயல்கள் தொடர்பில் தீர்மானமெடுக்கும் அங்கத்தவர்களைக் கொண்ட பொதுச் சபையையும் ;

"அமைச்சர்" என்பது சப்பிரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சரையும் ;

"ஆளுநர்" என்பது சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களையும் ;

"தவிசாளர்" என்பது சப்பிரகமுவ மாகாணத்தின் பிரதேச சபையொன்றின் கௌரவ தவிசாளர் ஒருவரையும் ;

"பாதை" என்னும் சொல்லுக்கு சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் சபைக்குச் சொந்தமாகியுள்ளதாகக் கருதப்பட வேண்டிய பாதையை, ஒழுங்கையை, ஒடுங்கிய ஒழுங்கையைப், ஒற்றையடிப் பாதையை மற்றும் படிக்கட்டுகளைப் பொருட்படுத்த வேண்டியதுடன், அத்தகைய ஏதாவதொரு பாதையின், ஒழுங்கையின், ஒடுங்கிய ஒழுங்கையின், ஒற்றையடிப் பாதையின், படிக்கட்டுகளின், பாதுகாப்புக் காணியும் அதனுடன் தொடர்புடைய ஏதாவதொரு பாலம், மதகு, பெட்டி மதகு, நீரிடைப்பாதை, பக்கச் சுவர், கட்டப்பட்ட அல்லது தோண்டப்பட்ட வடிகால் அல்லது ஒற்றைமரப் பாலமும் அத்துடன் அவற்றிற்கு உட்பட்டவைகளும் ;

"பாதையொன்றின் மேற்பரப்புத் தட்டு" என்பது கற்கள் மற்றும் தார் கலவை, இடைக்குட்பட்ட கற்கள், கொன்கிறீட், எஸ்போல்ட் கொன்கிறீட் அல்லது சரளைக் கற்களை உபயோகித்து மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முறையையும் ;

கந்தவல ஸ்ரீ லங்கா தொகுதி இலக்க அமைப்பு என்பது, ஈபீஎஸ்ஜீ 5234 கந்தவல / ஸ்ரீ லங்கா கிரீட் (EPSG 5234 Kandawala Sri Lanka Grid) ஐயும் ;

பொருட்படுத்தும்.

16. இக் கட்டளைகளின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில பிரதிகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலப் பிரதியே மேலோங்கி செயற்படல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

5(1) ஆம் பிரிவு

### தெருக்களுக்கான குறியீட்டு இலக்கங்களை ஒதுக்குதல்

சபைக்குச் சொந்தமானதாகக் கருதப்பட வேண்டிய ஏதாவதொரு பாதைக்காக ஒதுக்கிக் கொடுக்கப்படும் குறியீட்டு இலக்கத்திற்கு பின்வரும் தகவல்கள் உள்ளடங்குதல் வேண்டும்.

குறியீடு : மாகாணம்/பிரதேச சபை/பாதையின் நேர் கோட்டுப் பாதை (RDA/PRDA) உள்ளூராட்சி நிறுவனத்திற்குச் சொந்தமான பாதை/ துணைப் பாதை

உதாரணம் : SG/WPS/A4/01/01

SG - சப்பிரகமுவ மாகாணம்
WPS - வெலிகெபொல பிரதேச சபை
A4 - கொழும்பு - மட்டக்களப்பு வீதி (பிரதான வீதி)
01 - முதலாவது துணை வீதி
01/ 01 - முதலாவது துணை வீதியின் துணை வீதி

- மாகாணத்திற்காக ஒதுக்கிக் கொடுக்கப்படுகின்ற குறியீட்டிற்கு "SG" என்பதை உபயோகித்துக் கொள்ளல் வேண்டும்.

- பிரதேசம் சபைக்காக ஒதுக்கப்படுகின்ற குறியீடு, சப்பிரகமுவ மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளின்படி ஒதுக்கிக் கொள்ளல் வேண்டும்.

- அடிக் கோட்டுத் தெரு என பொருட்படுத்துவது, வீதி அபிவிருத்தி அதிகாரச் சபைக்கு அல்லது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான தெருவொன்றாகும். அதாவது ஏதேனுமொரு நிறுவனத்தினால் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட அறிவித்தலொன்றில் மேற்கூறிய ஏதாவதொரு தெரு தொடர்பில் மேற்கூறிய தெருவுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் இதற்காக உபயோகித்துக் கொள்ளல் வேண்டும்.

- பாதையின் குறியீட்டின் அடுத்துவரும் இலக்கமாக இருக்க வேண்டியது அடிக் கோட்டுத் தெருவிலிருந்து நீடிக்கும் தெருக்களின் தொடர் அடிப்படையில் ஒதுக்கப்படுகின்ற இலக்கமொன்றாக இருத்தல் வேண்டும்.

- இங்கு "துணைப் பாதை" எனக் கருதப்படுவது, உள்ளூராட்சி நிறுவனமொன்றிற்குச் சொந்தமான ஏதாவதொரு பாதையிலிருந்து ஆரம்பமாகி நீடிக்கும் துணைப் பாதையொன்றாகும். அத்தகைய பாதையொன்றாகும் போது, இக் குறியீட்டின் இறுதி இரு இலக்கங்களுக்கு எண்ணொன்றை விநியோகித்தல் வேண்டும். துணைப் பாதையொன்றல்லாத உள்ளூராட்சி நிறுவனமொன்றிற்குச் சொந்தமான பாதையொன்றாகும் போது இந்த கடைசி இரண்டு இலக்கங்களும் "00" ஆக இருத்தல் வேண்டும்.

**இரண்டாம் அட்டவணை**

7 ஆம் பிரிவு

**பாதையின் திட்டப்படம்**

தெரு இலக்கம்

தெருவின் பெயர்

வடக்கு ↑

தொகுதி இலக்கம் (கந்தவல ஸ்ரீ லங்கா)

வரைபடம்

குறிசுட்டி

அட்டவணை

அளவைத் திட்டம்

தரவு அடிப்படை :

ஒழுங்கு செய்யப்பட்டது :

திகதி :

அனுமதி அளிக்கப்பட்டது :

திகதி :

தொகுதி இலக்கம் (கந்தவல ஸ்ரீ லங்கா)

**மூன்றாம் அட்டவணை**

*8 ஆம் பிரிவு*

| தொடர் இல. | பாதை யின் குறியீடு | பாதையின் பெயர் | ஆரம்ப தொகுதி இலக்கங்கள் (கந்தவல/ ஸ்ரீ லங்கா) | | கடைசித் தொகுதி இலக்கங்கள் (கந்தவல/ ஸ்ரீ லங்கா) | | பாதை யின் நீளம் (மீற்றர்) | பாதையின் சாதாரண அகலம் (மீற்றர்) | அபிவிருத்தி அகலம் (மீற்றர்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இடது | வலது | இடது | வலது | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

EOG 05 - 0363

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.